


யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# சந்திரசிறி இராஜேஸ்வரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

14.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப்
பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# சந்திரசிறி இராஜேஸ்வரன்

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# நினைவு மலர்

**14.05.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி
எம்மை உயிருக்குயிராக நேசித்து அன்பெனும்
பாசவலையில் சிக்கவைத்து அன்னையாய்
ஆசானாய் ஆற்றிய சேவைகள் மண்ணில்
உள்ளவரை மறப்போமா தாயே
கண்ணை இமைகாப்பதுபோல் எம்மைக் காத்தீர்
எம்மைத் தவிக்கவிட்டு வந்து கடன் முடித்துக்
கொண்டு கணப்பொழுதில் வானுறை சென்ற தாயே
எம் இதயத்தில் என்றும் அணையாத தீப ஒளியாய்
சுடர்வீசும் எம் அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்களில்
நீங்காத நினைவுகளை நெஞ்சில் சுமந்தவண்ணம்
கண்ணீரைக் காணிக்கையாக்கி இப்புனித
மலரை சமர்ப்பணம் செய்து வணங்குகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப்
பிறப்பிடமாகக்கொண்ட

தோற்றம்
17 - 05 - 1953



மறைவு
28 - 04 - 2016

அமரர்

# சந்திரசிறி இராஜேஸ்வரன்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

துர்முகி ஆண்டு சித்திரைத் திங்கள் பதினைந்தாம் நாள் அபரபட்ச
சஷ்டி திதியதனில் பண்பின் சிகரமாய் பாரினில் நீண்ட புகழ்
சந்திரசிறி என்னும் நல்லாள் காயம் நீத்து செல்வர் சிவபுரத்-
தினுள்ளார் சிவனடிக் கீழ் சங்கமித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்களின் பெற்றோர்



## 1948

அமரத்துவ தம்பதிகள்

திரு. கந்தையா கதிரவேலு (சீனி வாசகம்)

மலர்வு : 22.07.1922 உதிர்வு : 12.01.2011

திருமதி. கதிரவேலு (சீனிவாசகம்) நாகம்மா

மலர்வு : 23.11.1923 உதிர்வு : 25.08.1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

அல்லல் போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்குங்
கணபதியைக் கைதொழுதக்கால்

## தேவாரம்

மண்ணில் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந்துறை யுறை சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரன்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலங் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிற்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

இக்காயம் நீக்கி யினியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று
அக்கால முன் அருள் பெறலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்ன என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை

கீதம் பாட கிண்கிணி யாட
மைய னடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலஸ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஸ்டகம்

நான் முகன் திருமால் பூஜை செய் லிங்கம்
தூய சொல் புகழ்பெறும் ஏழெழில் லிங்கம்
பிறவிப் பெருந்துயர் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
காமனை எரித்த பேரருள் லிங்கம்
இராவணன் கர்வம் அடங்கிய லிங்கம்
வழி வழி முனிவர்கள் வழிபடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
திவ்விய மணம் பல கமழ்கின்ற லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
படமெடுத்தாடிடும் பாம்பணி லிங்கம்
கனகம் நவமணி ஒளி திகழ் லிங்கம்
தட்சனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
குங்குமம் சந்தனம் பொலிந்திடும் லிங்கம்
பங்கய மலர்களைச் சூடிடும் லிங்கம்
வந்ததோர் பாவத்தைப் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
அமர கணங்கள் போற்றிடும் லிங்கம்
அன்பர்கள் பக்தியை ஏற்றிடும் லிங்கம்
கதிரவன் கோடி சுடர்மிகு லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
எட்டிதழ் மலருடை சுற்றிடும் லிங்கம்
எல்லாப் பிறப்பிற்கும் காரண லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
சுரரவர் குருவுடன் தொழுதிடும் லிங்கம்
நிரந்தரம் வானத்து மலர்நிறை லிங்கம்
அனைத்திற்கும் மேம்பாடு பரம்பொருள் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
சிவ சன்னிதானத்தில் இதனை உரைப்பார்
சிவபதம் எய்தியே சிவனோடு இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



**விநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

**வேண்டுதற் கூறு**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றிஎமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி மாலை
# ஓ ஶ்ரீ ஜெய சக்தி

ஓம் ஶ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஶ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் உனைப் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஶ்ரீ ஜெய...

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய அம்மம்மா
தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் - ஜெய

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஶ்ரீ ஜெய்...

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஶ்ரீ ஜெய...

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொணி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா ஓம் ஶ்ரீ ஜெய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

ஓம் பூர் பூவர்ஸ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந: ப்ரசோதயாத்

24 அட்சரங்களைக் கொண்டது காயத்ரி மந்திரம். இதை தினசரி ஜபித்துவந்தால் பூர்வ ஜென்ம பாவங்கள் அகலும். சக்திகள் பெருகும். வைராக்கியம் உண்டாகும். காயத்ரி என்பதற்கு தன்னை ஜபிப்பவனைக் காப்பாற்றுவது என்று பொருள். இதை ஜபித்துவர எல்லாவித ஆபத்துக்களும் நீங்கும். மற்ற எல்லா மந்திரங்களுக்கும் தாய் போன்றவள் காயத்ரி.

காலையில் கிழக்கு முகமாக சூரியனைப் பார்த்து நின்று கொண்டு இரு கைகளையும் முகத்திற்கு எதிராகக் கூப்பிக் கொண்டும் மதியம் கிழக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு கைகளை மார்புக்கு எதிரே கூப்பிக் கொண்டும், மாலையில் மேற்கு முகமாக அமர்ந்து கைகளை நாபிக்கு சமமாக கூப்பிக்கொண்டும் ஜபம் செய்ய வேண்டும்.

மனம் ஒரு புறம் எதையோ நினைத்துக்கொண் டிருக்க வாய் மட்டும் இந்த மந்திரத்தை 1008 தடவை உச்சரித்தால் பலன் கிடையாது. முறையாக முழுமன ஒருமைப்பாட்டுடன் கூறினால் மட்டுமே பலன் கிடைக்கும். அந்தப் பரம ஜோதி சொரூபமான சத்தியத்தை நாம் தியானிக்கிறோம் பூ உலகம், மத்திய உலகம், மேல் உலகம் மூன்றுக்கும் சக்தி அது. அந்தப் பரம சக்தி நமது புத்தியை வெளிச்சப்படுத்தட்டும் என்பது இதன் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரசிறியின் (கிளி)யின் வாழ்க்கைச் சுவடுகள்

ஈழத் திருநாட்டின் வடபகுதியின் தலைநகராம் யாழ் நகரில் நல்லூர் என்னும் புனித நகரில் சங்கிலிய மன்னனின் இராஜதானி அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியும், ஆடியபாதம் வீதியும் சங்கமிக்கும் தென்கிழக்குத்திசையில் உள்ள செங்குந்தா வீதியில் நல்லற வழியில் இல்லறம் நடத்திவந்த காலஞ் சென்றவர்களான கதிரவேலு (சீனிவாசம்) நாகம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வியாக திருமதி.சந்திரசிறி 1953ம் ஆண்டு வைகாசித்திங்கள் 17ம் நாள் இப்பூமியில் அவதரித்தார். 'கிளி' என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.

அன்னாரது சகோதரர்களான லைலாராணி (பானுமதி) சூரிய குமாரன், காலஞ்சென்ற சந்திரகுமாரன், மற்றும் ஜெயசிறி, இராஜ குமாரன் ஆகியோருடன் பாசமிகு சகோதரியாக வாழ்ந்து வந்தார். இளவயதில் சுறுசுறுப்பும், வசீகரமும், துணிவும், விவேகமுள்ளவராக எந்த வேலையைக் கொடுத்தாலும் பொறுப்பேற்று கவனமுடன் செய்து முடிக்கும் திறன் வாய்ந்தவராகக் காணப்பட்டார். வீட்டுக்கும், சமூகத்துக் கும் தன்னாலான சேவைகளைச் செய்துள்ளார். தான் பெற்ற கல்வியை எதுவித பலனும் பாராது கற்பித்துக்கொடுத்து பலருக்கும் வழிகாட்டி யுள்ளார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக் கமைய அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து பலருக்கும் தன்னாலான சேவைகளைச் செய்துள்ளார்.

அன்னார் பாலர் வகுப்புக்கல்வியை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், ஆரம்பக்கல்வி, மற்றும் உயர்தரக் கல்வியை யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரியிலும் பயின்றார். யாழ் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் நூலகப் பணியாளருக்கான நெறிப்பரீட்சையில் சித்தியடைந்து யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரியில் சிறிது காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப்பணியாளராகக் கடமை ஆற்றியுள்ளார். அதன்பின் I.C.M.A. கணக்காளர் நெறிப்பரீட்சையில் முதல் வருடம் சித்தியடைந்து இரண் டாம் வருடம் தொடங்கும் சமயத்தில் யாழ்/கல்வித்திணைக்களத்தில் 1990ல் எழுதுவினைஞராகப் பணிபுரியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சிறிது காலம் யாழ் மாநகரசபையிலும் பணிபுரிந்து வரும் நாளில் 2008 ஆண்டில் உடல் ஆரோக்கியக் குறைபாட்டால் மருத் துவச் சான்றிதழ் சமர்ப்பித்து அரச பணியிலிருந்து ஓய்வுபெற வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1991ஆம் ஆண்டு வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் சண்முகம்பிள்ளை இராஜேஸ்வரன் என்பவரை வாழ்க்கைத் துணைவராகக் கரம்பிடித்தார். அதன் பயனாக பிள்ளைச் செல்வமாக அருமை மைந்தனாக கீர்த்தனன் என்பவரை பெற்றெடுத் தனர். சென்பரியோவான் கல்லூரியில் முன்னோடி மாணவராகத் திகழ்ந்த கீர்த்தனனின் திறமைகளில் மகிழ்ந்திருந்த வேளையில் நாட்டுப் பிரச்சனை காரணமாக இந்தியா செல்லவேண்டி இருந்ததால் அவர்கள் வளர்ச்சியில் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது. இரண்டு வருடங்களின் பின் நாடு திரும்பியவர்கள் மீண்டும் தங்கள் மைந்தன் கீர்த்தனனை சென்பரியோவான் கல்லூரியில் அனுமதித்துக் கல்வியைத் தொடரவைத்தனர். அதைத் தொடர்ந்து கீர்த்தனன் BCAS CAMPUSல் (Bio medical science) course கற்றுக்கொண்டிருக்கின்றார்.

இறைபக்தி நிறைந்த இல்லத்தரசியாக வாழும் காலத்தில் 25 வருடகாலமாக அன்னாரது மூன்றாவது தலைமுறையாக கொடுத்து வரப்பட்ட சட்டநாதர் சிவன்கோவில் அம்மனுக்குரிய கொடிச்சீலை யையும் அதே கோவிலில் மூன்றாவது தலைமுறையாக செய்துவரும் சோமவாரத் திருவிழாவின் மூன்றாவது திங்களுக்குரிய பூசையையும் பொறுப்பேற்று ஒழுங்காகச்செய்து வந்தார். மற்றும் பூதவராயர் ஆலயத்தில் சக குடும்பத்தினரால் நிறுவப்பட்ட நவக்கிரக சந்நிதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமான வேலைகள் தொடக்கம் கும்பாபிஷேகம் வரையில் உள்ள ஒழுங்குகள் அத்தனையையும் செய்வதற்கு தனது கணவருக்கு உற்ற துணையாக இருந்து ஒத்துழைத்தார். மற்றும் இந்தியா சென்ற சமயம் திருப்பதி, திருவெண்ணாமலை ஆறுபடைவீடுகள் போன்ற பல திருத் தலங்களையும் தரிசித்து இறை அருள் பெற்றனர்.

இல்லறமே நல்லறம் என வாழ்ந்துவரும் வேளையில் திரு.இராஜேஸ்வரன் அவர்கள் கொடிய காலனின் கண்ணுக்கு அகப்பட்டு யாரும் எதிர்பாராத வேளையில் 06.06.2015 அன்று திடீரென மாரடைப்பால் மண்ணுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார். அதைத் தொடர்ந்து பேரதிர்ச்சிக்குள்ளாகிய திருமதி.சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்கள் ஆழ்ந்த கவலைக்குட்பட்டு மேலும் உடல் ஆரோக்கியம் குன்றிய நிலையில் சளி ஜிரம் காரணமாக யாழ்/ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைகாசித்திங்கள் 25ம் திகதி அன்னாரது கணவரின் ஓராண்டு நினைவு தினத்தின் கிரிகை களுக்கான ஒழுங்குகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் இரண்டு கிழமையாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்திரசிறி இராஜேஸ்வரன் தேக ஆரோக்கியம் குன்றி பலவீனமாகி எதிர்பாராத நிலையில் எல்லோரையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கி 28.04.2016 அபரபட்ச சஷ்டி திதியில் மண்ணுலக வாழ்வை நீத்து இறைவன் பாதக் கமலங்களில் சங்கமித்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல் லாம் வல்ல இறைவைனப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் - இராஜேஸ்வரன்

அவர்களின் பட்டமளிப்பு வைபவத்தில் யாழ் / பல்கலைக்கழகத்தில்
அமரர்கள் இராஜேஸ்வரனும் சந்திரசிறியும் பங்குபற்றும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மா

இவ் உலகிற்கு என்னை அறிமுகப்படுத்தியதற்கு
முத்தங்களுடன் நன்றிகள் அம்மா

உங்கள் உயிரினும் மேலாக என்னை அரவணைத்தீர்கள்
அன்பு என்ற ஒரு சொல்லின் விளக்கத்தை
இவ் உலகில் என்னை விட அறிந்தவர் யாருமில்லை
ஒரு நொடி தாமதமானாலும் எங்கே நான் என்று
வழியின் மேல் விழி வைத்து காத்து நிற்பீர்கள்
எத்தனை பேர் எம்மைச் சூழ இருந்தாலும்
தாய்மைக்கு ஈடாகாது
அந்த உரிமை உங்களிடத்தில் மட்டுமே

எனக்காக துடித்த இதயம் நின்றுவிட்டது இப்பொழுது
எண்ணிலா துயர்களுடன் நானும் இப்பொழுது

உங்களின் நினைவுகள் என்றும் என்னுடன் பயணிக்கும்
என் வாழ்க்கையின் அனைத்து மகிழ்ச்சியான
தருணங்களும் என் மனதில் வசந்தகாலமாய் பதிந்திருக்கும்
காலஓட்டத்தில் உங்கள் இழப்பை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்

அப்பாவுடன் விண்ணுலகில் ஓர் முடிவில்லா சந்தோசமான
வாழ்க்கையை ஆரம்பித்திட என் வாழ்த்துக்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**என்றும் உங்கள் நினைவுகளை சுமந்த வண்ணம்**
**உங்கள் உயிரினும் மேலான புத்திரன்**
**கீர்த்தனன் இராஜேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியின் நினைவுகளைச் சுமந்தவண்ணம்...

கிளி நீர் எதிர்பாராத நேரத்தில் எங்களை விட்டுப் பிரிந்து சென்றீர், பேரதிர்ச்சிக்குள்ளாக்கி பெருந்துயரில் தவிக்கின்றோம். உமது இழப்பை பற்றி நாங்கள் படும் துயரத்தை வாயால் சொல்ல வார்த்தை இல்லை – கிளி நீரும் நானும் இரண்டு வயது வித்தியாசத்தில் அக்கா, தங்கையாகப் பிறந்து சோடிப் பிள்ளைகள் மாதிரிப் பெற்றோரால் வளர்க்கப்பட்டோம். எனக்கு என்ன புதுச்சட்டை தைத்தாலும் அதே நிறத்தில் அதேமாதிரிச் சட்டை தான் உமக்கும். எங்கு போனாலும் ஒரேமாதிரியான ஆடைகளைத்தான் பெற்றோர்கள் அணிவிப்பார்கள்.

நல்லூர்த் திருவிழா ஒன்றில் சனநெரிசலுக்கு மத்தியில் ஐயா (எனக்கு 7வயது உமக்கு 5 வயது) உம்மையும் என்னையும் இரு பக்கத்திலும் தம்பி சூரிய குமாரனை தூக்கி வைத்துக்கொண்டும் நடந்து போகும்போது சிறிது நேரத்தில் கிளியைக் காணவில்லை என்று பதட்டமடைந்து தேடும்போது நீர் வழிதடுமாறிச் சென்றபடியால் உம்மைப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் சந்திரசிறி – சீனிவாசகம் அழுதுகொண்டு நிற்கின்றார். உடனடியாகவந்து கையேற்கவும் எனவும் அவர் நீல நிறச் ஆடை அணிந்துள்ளார் எனவும் ஒலிபெருக்கி மூலம் சொல்லிக்கொண்டிருந்தார் கள். ஐயா உடனடியாக எங்களையும் கூட்டிக்கொண்டு சென்று பார்க்கும் போது அங்கு நீர் வாய்விட்டு அழுதுகொண்டு நின்ற காட்சி இன்றும் எனது மனதில் பசுமையாக உள்ளது. நான் போட்டிருந்த அதேசட்டை மாதிரித்தான் நீரும் போட்டிருந்தீர். எங்களைக் கண்டவுடன் ஓடிவந்து கட்டி அணைத்து கதறி அழுதீர். நானும் உம்முடன் சேர்ந்து அழுதது ஞாபகத்தில் இருக்கின்றது.

வேம்படி மகளிர் கல்லூரியில் நீர் மூன்றாம் ஆண்டும் நான் நான்காம் ஆண்டும் படிக்கும்போது ஒரே வருடத்தில் அனுமதிகிடைத்தது. அப்போ தெல்லாம் இடைவேளையில் Canteenக்குச் சென்று இனிப்பு, மிட்டாய், toffee chocolates எது வாங்கினாலும் உமது வகுப்புக்கு வந்து அதில் ஒரு பங்கைத் உமக்குக் கொடுத்து விட்டுத்தான் போவேன். இதுபற்றி உமது அருமைப் புத்திரன் கீர்த்தனனுக்குக்கூட நீர் சொல்லியுள்ளீர் என அவர் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tuition க்குப் போகும்போது சேர்ந்து போவது, விளையாடும் போது Sports meet வரும்போது வேம்படியில் இருவரும் Greedy House. விளையாட்டுப் பயிற்சியில் நானும் நீரும் வீட்டில் Hallக்குள் விழுந்து காயம் ஏற்பட்டு அம்மாவிடம் பேச்சுவாங்கியது எல்லாவற்றையும் நினைத்துப் பார்க் கின்றேன். மறக்க முடியவில்லையே கிளி எங்களை மறந்து எங்கு சென்றீரோ.

எத்தனை சோதனைகளிலும் கரம்கொடுத்து தோள்கொடுத்து ஆறதல் தந்தீர். கிளி நீங்காத நினைவுகளைத் தந்து எங்கு சென்றீரோ.

அம்மாவின் சுகயீனத்தில் ஐயா உட்பட நாங்கள் எல்லோரும் அவரைக் கவனமாக பராமரித்த விடயங்களை மீட்டுப்பார்க்கின்றேன். எப்படி எங்களை மறந்தீரோ?

லண்டனிலிருந்து அடிக்கடி உமது சுகம் கேட்க தொலைபேசியில் உரையாடுவேன். அக்கா அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொள்ளுவா என்று உமக்குத்தெரியும். இனி எப்போ உம்முடன் உரையாடுவது? பதில் சொல்லமாட்டீரோ?

இறுதியாக நீரும், தம்பி சூரியகுமாரனும் யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசியில் என்னுடன் லண்டனுக்குத் தொடர்புகொண்டு கதைத்த போது எப்படி சுகம் கிளி என்று கேட்க கொஞ்சம் பலவீனமாகத்தான் இருக் கின்றது அக்கா என்று சொன்னீர். கொஞ்ச நேரத்தில் நீர் சோர்ந்து போவதாகச் சொல்லிவிட்டு தம்பி தொலைபேசியை நிறுத்திவிட்டார். ஏதொ நடந்துவிட்டது என்பது மட்டும் எனக்குப் புரிந்துவிட்டது. மீண்டும் முயற்சித்து தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தியபோது கிளி அக்காவை யாழ் வைத்திய சாலைக்குக் கொண்டு போகின்றேன். தாமதிக்காமல் லண்டனிலிருந்து புறப்பட்டு வரவும் என்று சொன்னதும் இரண்டு நாட்களில் இங்கு வந்தேன். வந்ததும் என்னை அடையாளம் கண்டு அக்கா வந்து விட்டீர்கள். இனிப்போக வேண்டாம் என்று எவ்வளவு தெளிவாக எனது கையைப்பிடித்து உரை யாடினீர். ஒரு கிழமையாக நீர் அடிக்கடி அக்கா அக்கா என்று உரையாடி யதை மறக்க முடியாது கிளி. அக்கா வந்தாலும் கிளி அக்காவுக்குச் சுகம்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் எல்லோரும் சொன்னார்கள் நானும் அதைத்தான் நம்பினேன். ஒருகிழமை என்னுடன் மிகவும் தெளிவாகவும் உற்சாகமாகவும் திருப்தியாகவும் தான் உரையாடி இருந்தீர். அடுத்த கிழமை உமக்கு என்ன நடந்தது கிளி? பார்த்திருக்க உடல் ஆரோக்கியம் குன்றி படிப்படியாக உமது இயக்கம் குறைந்தது. இவ்வளவு விரைவாக உமக்கு இப்படி ஒரு முடிவு வரும் என்று யாராலும் நம்பமுடியவில்லை. தம்பி தம்பி என்று அடிக்கொரு தடவை சொல்லும் உமது அருமை மைந்தனை விட்டுப்போக எப்படி மனம்வந்தது கிளி. மெல்லமாக உருகி அணைந்துவிட்டது எம் பாசவிளக்கு.

எங்கள் குடும்பத்தின் ஒரு தூண் சாய்ந்துவிட்டது. உம்மை ஒரு சகோதரியாக, நண்பியாக, நல்ல ஆலொசகராக எமக்களித்த இறைவனுக்கு நன்றி மேலும் இறுதி நேரத்தில் உம்முடன் பக்கத்தில் இருந்து சேவைசெய்ய வாய்ப்புத்தந்ததை பெரிய பாக்கியமாக ஏற்று நன்றி செலுத்துகிறேன். கிளி நீர் இப்போது எம்மத்தியில் இல்லை அதை ஏற்க எம் இதயம் மறுக்கிறது.

ஆனாலும் விடை தந்துதான் ஆகவேண்டும். கனத்த இதயத்துடன் கண்ணீர் சொரிய விடைதருகிறேன் கிளி நீர் உமது கணவருடன் இணைந்து இறையாசிபெற்று நித்திய மகிழ்வுடன் இறைவனடிசேர என்றென்றும் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**என்றும் உமது நினைவில் பாசமிகு அக்கா**
**லைலாராணி (பானுமதி)**
**லண்டன்**

**“நெருநல் உளன் ஒருவன் என்றில்லை**
**என்னும் பெருமை உடைத்திவ்வுலகு”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி அக்காவின் நினைவுத் துளிகள்...

கிளி அக்கா எனக்கு இரண்டாவது அக்கா பெற்றோருடன் வாழ்ந்த காலங்களில் பிள்ளைப் பருவத்தில் நாம் ஐந்துபேர், அத்துடன் பெரியம் மாவின் பிள்ளைகள் செல்வராணி அக்கா, சின்னக்கிளி, அத்தானந்தன் குண்டுமணி மிகவும் சந்தோஷமான கூட்டுக் குடும்ப வாழ்க்கை. கிளி அக்கா எனக்கு ஒரு தாயாக, ஆலோசகராய், ஆசானாய், பாதுகாவலராய் எல்லாப் பாத்திரங்களிலுமுள்ள சேவைகளைச் செய்துள்ளீர்கள். எனக்கு கணிதபாடம் கற்பிப்பதற்கு மிகவும் கவனமெடுத்தீர்கள்.

நாங்கள் நால்வரும் உங்களைப் பிரிந்து லண்டன் போனபின் 2013ம் ஆண்டு உங்களை நான் வந்து பார்த்தபோது உங்கள் உடல் நிலை எனக்குத் திருப்தி அளிக்காததால் லண்டனிலிருந்து மற்றய சகோதரர்கள் நால்வரையும் உடனடியாக யாழ்ப்பாணம் வரும்படி செய்து உடனே உங்களைக் கொழும்பு டேடின்ஸ் (Durdens Hospital) வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று சகல பரிசோதனைகளையும் செய்து பிரத்தியேக வைத்தியர்களிடம் காட்டி வைத்தியம் செய்து உங்களுடன் நானும், அக்காவும் தங்கியிருந்து உங்களைக் கவனித்தோம். படிப்படியாகக் குணமாகினீர்கள். உங்களுக்கு உணவூட்டி அவ்வப்போது வைத்தியரிடம் கொண்டு சென்று மிகவும் கவனமாகப் பராமரித்தேன். லண்டன் போய் மீண்டும் இரண்டு மாதங்களில் திரும்பிவந்து உங்கள் உடல் ஆரோக்கியத்திற்காக என்னாலான முயற்சி எல்லாம் செய்தேன்.

எதிர்பாராத விதமாக அத்தான் இராஜேஸ்வரனின் இழப்பு உங்களை மீண்டும் மீண்டும் நோயாளியாக்கியது. அதன் பயனாக உங்கள் உடல் ஆரோக்கியம் கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

நீங்கள் மரணமடைவதற்கு ஒருமாதம் முன்பே நான் மீண்டும் இலங்கை வந்து அத்தானின் 1ம் வருட நினைவு நாளுக்காக (திவசத்திற்காக) சகல ஏற்பாடுகளையும் செய்து திகதியும் நிர்ணயித்தபின் தான் உங்களுக்கு இந்தக் கொடிய காய்ச்சல் வந்து உங்களைத் தாக்கியது. உங்கள் உடல்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி இல்லாத காரணத்தால் Dr.பேரானந்த ராஜாவிடம் காட்டிவிட்டு மருந்து எடுத்துக்கொண்டிருக் கும் போதுதான் லண்டனில் அக்காவுடன் தொடர்புகொண்டு கிளி அக்கா... உங்களையும் அக்காவுடன் கதைக்க வைத்த சமயத்தில் கதைத்துக்கொண்டே மயங்கிவிட்டீர்கள். அதன் பின்பு யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று அவசர சிகிச்சைப்பகுதியில் சேர்த்துவிட்டு அக்காவை உடனே புறப்பட்டு வரும்படி செய்தேன்.

வைத்தியசாலையில் அக்காவைக் கண்டதும் திருப்தியுடன் அக்காவுடன் உரையாடி ஒரு கிழமை சந்தோஷமாக இருந்தீர்கள். வைத்தியசாலையில் அக்காவும் நானும் உங்களுடன் உரையாடி உங்களுக்கு உணவூட்டி கதைகள் சொன்னோம். நன்றாகத்தானே இருந்தீர்கள். அடுத்தகிழமை என்ன நடந்தது கிளி அக்கா. படிப்படியாக உடல் ஆரோக்கியம் குன்றி மயக்க நிலையில் இரண்டு நாட்கள் இருந்து எங்களை விட்டுப் பிரிந்துவிட்டீர்கள். எல்லோரையும் ஏமாற்றிவிட்டீர்கள். விதி வலியது. வைகாசித்திங்கள் 25ல் அத்தானின் ஓராண்டு திவசத்திற்கு ஏற்பாடு செய்யும் வேளையில் உங்கள் பிரிவு பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது.

நொருங்கிய இதயத்தோடு உங்களுக்கு விடைதருகிறேன் கிளி அக்கா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**என்றும் எனது நினைவில்**
**சூரியகுமாரன் (பாசமிகு தம்பி)**
**லண்டன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி அக்கா என்றும் என் இதயத்தில்

கிளி அக்கா நீங்கள் இப்போ எம்மத்தியில் இல்லை. உங்களுக்கு வந்த ஜிரம் (காய்ச்சல்) இந்த நிலைக்கு உங்களைக் காவு கொண்டுபோகும் என யாருமே நினைத்திருக்கவில்லை. நீங்கள் மீளாத்துயில் கொண்டுவிட்டீர்கள் என்ற செய்தி இரவு 1.00 மணி அளவில் எனக்கு அண்ணா மூலம் கிடைத்தது. பேராதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் அதைத்தொடர்ந்து லண்டனில் இருந்து சரவணன் பதட்டத்தோடு தொலைபேசியில் மாமி மனதைத் தைரியப்படுத் துங்கோ கிளி மாமி எங்களை விட்டுப் போய்விட்டா என்று நடுங்கின குரலில் சொன்னார். என்னால் ஜீரணிக்க முடியவில்லை பதட்டம் நடுக்கம் ஆழ்ந்த கவலை எல்லாம் சேர்ந்த ஒரு உணர்வு. அவசர அவசரமாக லண்டனில் இருந்து புறப்பட்டோம்.

கிளி அக்கா உங்கள் அருமை மைந்தனை தம்பி தம்பி என்று அடிக்கொரு தடவை சொல்லித் தேடுவீர்களே. அவரை மறந்துபோக எப்படி மனம் வந்தது?

உங்களுடன் சகோதரர்களாக ஐந்துபேரும் ஐயா, அம்மாவுடன் வாழ்ந்த வாழ்க்கையை மீட்டுப்பார்க்கின்றேன். செல்வராணி அக்கா, சின்னக்கிளி சுத்தானந்தன் குண்டுமணி இவர்களுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த நான் உங்கள் தங்கையாக உங்களிடம் பெற்ற உதவிகள் ஏராளம். எனக்கு அன்னையாக ஒரு ஆலோசகராய், ஆசானாய், சகோதரியாய், நீங்கள் செய்த சேவைகள் அளப்பல. நீங்கள் எனக்குக் கணிதபாடம் சொல்லித்தந்தது, அம்மா நோய்வாய்ப்பட்டிருக்கும் போது ஐயாவின் உதவி உட்பட அக்கா, நீங்கள் நான் மூவரும் அவவை ஒரு குறையும் இல்லாது நன்றாகப் பராமரித்தது, என்னை லண்டன் அனுப்புவதற்கு நீங்கள் கொழும்புக்கு வந்து நிற்கும்போது உங்களுக்கு கல்வித்திணைக்கள நியமனம் வந்ததும் நீங்கள் யாழ்ப்பாணம் சென்றது, இந்தியாவில் நாங்கள் வீடு, எடுத்துதந்து உங்களுடன் சேர்ந்து அபிராவின் பிறந்தநாள் கொண்டாடியது, 2004ல் லண்டனில் இருந்து ஐயாவுடன் யாழ்ப்பாணம் வந்து எங்கள் குடும்பமும் இராசன் குடும்பமும் சேர்ந்து கோவில்கள் போனது, குழந்தைகளைக் கொண்டு சென்று சன்னதிக் கோவிலில் குளித்தது 2013ல் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அக்கா, அண்ணா, இராசன், அத்தான் எல்லோரும் சேர்ந்து உங்கள் பிறந்தநாள் கொண்டாடியது எல்லாமே இனிய நினைவுகள்.

அத்தான் மறைந்த செய்திகேட்டு நாங்கள் எல்லோரும் லண்டனில் இருந்து வந்தவுடன் நீங்கள் எனது மனதுக்குள் எவ்வளவு கவலையை அடக்கி வைத்திருக்கிறேன் என்று அழுதீர்கள். அப்போ 18 நாட்கள் தங்கிவிட்டு மீண்டும் லண்டன் சென்றுவிட்டேன். ஆனால் இது தான் உங்களை உயிருடன் பார்க்கும் இறுதிச் சந்தர்ப்பம் என்று யாருமே நினைத்திருக்கவில்லை. இம் முறை உங்களை இந்த நிலையில் பார்ப்போம் என்று கற்பனைகூடச் செய்யவில்லை.

கிளி அக்கா உங்களுடன் அக்கா தொலைபேசியில் கதைக்கும்போது நானும் இணைந்திருப்பேன் நன்றாகத்தானே கதைத்தீர்கள். அப்படி இந்தக் காய்ச்சல் எப்படி உங்களைக் காவுகொண்டு போனது. நீங்கள் மறைந்த செய்தியைக் கேட்ட நொடிப்பொழுதிலிருந்து இதயம் வலிக்கிறது.

வாழ்வேமாயம்' என நிரூபித்துவிட்டு பூவுலக வாழ்வை விட்டு விண்ணுலகு சென்றுவிட்டீர்கள். எங்கள் இதயத்தில் என்றும் பசுமையான நினைவுகளுடன் நீங்கள் வாழ்கின்றீர்கள். கிளி அக்கா நீங்கள் அத்தானுடன் இணைந்து இறை ஆசிபெற்று நித்திய மகிழ்வுடன் இறைவனடி சேர என்றென்றும் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி ஓம் சாந்தி

**என்றும் உங்கள் நினைவைச் சுமந்த வண்ணம்**
**பாசமிகு தங்கை**
**ஜெயசிறி குணசீலன்**
**லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரன் புலம்பல்

கிளி அக்கா இறந்த செய்தி வெறும் செய்தியாக தான் தோன்றுகிறது. காரணம் கிளி அக்கா இப்பவும் எம்மில் உலவி வருவதாக வெறும் பிரமை என்னால் அதை ஜீரணிக்க முடியவில்லை. காரணம் கிளி அக்கா வெறும் அக்காவாக இல்லாமல் ஒரு தாயாராக கூட எனக்குள் இருந்துள்ளார். இளவயதில் தாயாரை பிரிந்த எனக்கு அந்த கவலையை நிவர்த்தி செய்தவர்களில் கிளி அக்காவும் ஒருவர் சிறுவயதிலிருந்து கிளி அக்கா செல்லும் இடமெல்லாம் அவவுடன் நானும் செல்வது வழக்கம். தனது கூட்டு படிப்பிற்காக அவர் தனது நண்பிகளின் வீட்டுக்கு செல்லும்போது என்னையும் கூட்டிச்செல்வது வழக்கம் அந்த சிறுவயது நிகழ்வுகள் பசு மரத்து ஆணி போல இப்பவும் என் மனதில் பதிந்து நீங்கா இடம்பெற்றுள்ளது.

17வயதில் நாட்டைவிட்டு வெளியேறி இங்கிலாந்து சென்று 32வயதில் மீண்டும் கிளி அக்காவை ஒரு குடும்பத்தலைவலியாக அத்தான் இராஜேஸ்வரன், மகன் கீர்த்தனன் ஆகியோரிடன் நாட்டு பிரச்சினைகள் தீர்ந்த பின்பு 2004ம் ஆண்டு ஒரு குடும்பஸ்தனாக 3 பிள்ளைகளின் தந்தை யாக கிளி அக்காவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒருவரை ஒருவர் நாங்கள் சந்தித்தபோது சிறிது விநாடிகளுக்கு பிறகுதான் அடையாளம் கண் டோம். அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் நாங்கள் சந்தித்து வந்த வேளை யில் கடந்த வருடம் அத்தானின் இழப்பில் தாங்கள் வாடியிருந்தவேளை மீண்டும் ஒரு பேரிடியாக அக்காவின் மரணச்செய்தி என்னை உலுப்பி விட்டது. பிறந்தவர்கள் எல்லாம் மரணிப்பது இயற்கைதான். எனது தாயார் சொல்லும் ஒரு வாசகம் தான் இப்போ நினைவுக்கு வருகிறது.

"காயமே இது பொய்யடா வெறும் காற்று அடைந்த பை எடா
வாழுகின்ற பூமியே வெறும் நீர்க்குமிழி தானடா"

என்னதான் இருப்பினும் இடையில் வந்த இந்த சொந்தம் பந்தம் பாசப் பிணைப்புகளால் சிக்குண்டுவரும் இழப்புக்களை கண்டு எம்பால் ஜீரணிக்க முடியவில்லை. எப்படி இருப்பினும் கிளி அக்காவின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி கடவுளின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்

**உங்கள் பாசமிகு சகோதரன்**
**இராஜகுமாரன் கதிரவேலு**
**லண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி அக்காவை மறக்க முடியவில்லை

கிளி அக்கா என்றுமே என் இதயத்தில் உங்களுக்குத் தனி இடம் ஒதுக்கி வைத்துள்ளேன். நீங்கள் இன்னும் கொஞ்சக்காலம் இருந்து கீர்த்தனனை சந்தோஷப்படுத்தி நீங்களும் திருப்தியடைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. விதி வலியது. அத்தான் பின்னால் பயணித்துவிட்டீர்கள்.

முதன் முதலாகக் கொழும்பில் உங்கள் தங்கை ஜெயசிறியுடன் தான் உங்களை சந்தித்தேன். உங்கள் அன்பு, பண்பு, உதவிசெய்யு மனப்பான்மை, எல்லாமே இன்றும் எனது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளது. உங்கள் திறமைக்கும் சுறு சுறுப்புக்கும் எதிர்மாறாக உங்கள் நோய் உங்களை ஒரு சிறுபிள்ளையாக மாற்றிவிட்டது. அப்போது கூட எப்படி இருக்கின்றீர்கள்? உங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கின்றார்கள் என்று தொலைபேசியில் கேட்டு அறிவீர்கள். இறுதியாக பங்குனித்திங்கள் 8ம் திகதி எனது பிறந்தநாளுக்கு தொலைபேசியில் வாழ்த்துச் சொன்னது இன்னும் காதில் கேட்டுக்கொண்டிருக்கின்றது. உங்களையும் உங்கள் சேவை களையும் எங்களால் மறக்கமுடியாது. பிறந்தவர் யாவரும் ஒரு நாளைக்கு இறப்பது நியதி. ஆனால் விதி ஏனோ உங்களை கொஞ்சக் காலமாவது வாழவிடவில்லை.

கனத்த நெஞ்சத்துடன் உங்கள் ஆத்மா இறைவனடி சேர்ந்து அத்தானுடன் நித்திய வாழ்வுபெற பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

**உங்கள் பாசமிகு மைத்துனன்**
**குணசீலன் கதிரவேலு (லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்தில் இடம்பிடித்த கிளி அக்கா

கிளி அக்கா நீங்கள் இந்த உலகத்தைவிட்டு போட்டீர்கள் என்று இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. உங்களை நினைக்கும் போது என் கண்கள் குளமாகிறது. அத்தானின் ஆண்டு திவசத்திற்கு வருவோம் என்று நாங்கள் சொல்லி இருந்த வேளையில் அதற்கு முதல் போக எப்படி மனம்வந்தது நாங்கள் கீர்த்தனனுக்கு பக்கபலமாக இருக்கிறோம். எது எப்படி இருப்பினும் விதியின் வலையில் நீங்களும் சிக்கிவிட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

**உங்கள் பாசமிகு மைத்துனி**
**அனுலா (மாலா) ராஜகுமாரன்**
**லண்டன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## What Does Killimami Mean To Me?

Killimami Was a Loving and Caring woman, with whom we shared in the darkest of times just to keep the rest of us happy. One of those dark times was when our uncle, her husband, had died. of course, we were all saddened by the news but she must have been affected the most even through the sorrow she made us her first priority, always ensuring to ask about my life and concerning herself with my matters, I really coud not have asked for a better aunt.

The moments we spent with her are something we will never forget All the times we had visited her in Srilanka, we were always treated like a son rather than a nephew.

Often she would worry too much but personally I think that was one of her best qualities, sitting in my Room putting off drying my hair, Killimami walked in worried that I was going to catch a cold, immediately grabbing a towel she took it upon herself to make sure I was in good health by quickly drying my hair, I only hope that the kindness she showed me and many others will not be forgotten.

You have touched the hearts of many people and so you will certainly be missed killimami.

May your soul rest in peace.

Your ever loving nephews
Saravanan Rajakumaran
Kubiran Rajakumaran
(London)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In Memory Of My Beloved Killimami

Caring, loving and kind
These are Just a few words about the memories of her will always bring a smile she spreads Joy to everyone around her I will treasure every moment we shared together. She adored and cared about all of us she will always be in our hearts.

May you soul rest in peace.
I will never forget you killimami.

'Good bye killimami'

Bavitra Rajakumaran
Your Loving Niece
London

## In Memory Of My Special Killimami

We thought of you love to day
But that is nothing new
We thought about you yesterday
And days before that too
We think of you in silence
We often speak your name
Now all we have are memories
Your memory is our keepsake
Which well never part
God has you in his keeping
We have you in our hearts

May your soul rest in peace.

Your Beloved Daughter
Archana Kunaseelan
London



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Favourite Killimami

There's a special angel in heaven
That is a part of me
It is not where I wanted her to be
She was here just a moment
Like a shooting star
And though he is in heaven
She is not very far
She touched the heart of many
Like only an angel can do
We shall always have you
Today and forever more

May almighty god hold you in the palm of his hand and bless your soul rest in peace

Your Loving daughter
Abeera Kunaseelan
London





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உடன்பிறவா சகோதரி

எங்கள் எல்லோருக்கும் உடன்பிறவா சகோதரியாக இருந்த திருமதி. சந்திரசிறி ரஜேஸ்வரன் ஆகிய கிளி எங்களைவிட்டு நிரந்தரமாக இவ்வளவு வெகு விரைவில் பிரிந்து செல்வீர்கள் என்று நாம் கனவிலும் நினைக்க வில்லை. இந் நிகழ்வை இன்று எங்களால் ஜீரணிக்க முடியவில்லை இன்னும் எவ்வளவு காலம் தந்தையை இழந்து தவிக்கும் உங்கள் அருமை மகனுடன் வாழவேண்டிய நீங்கள் இந்த வயதில் எல்லோரையும் விட்டு பிரிந்தது ஏனொ? நினைக்க நினைக்க எங்கள் மனம் ஆறவில்லை. எவ்வளவு திறமை சாலி நீங்கள் படிப்பதிலோ, படிப்பு சொல்லி கொடுப்பதிலோ உங்களுக்கு நிகர் யார்?

சின்ன சின்ன நோய்கள் வந்து உங்களை பலவீனமாக்கிவிட்டது.ஆனால் இப்படி ஒரு இடியாய் போவீர்கள் என்று நாங்கள் கடைசிவரை நினைக்க வில்லை ஆஸ்பத்திரியில் வருத்தமாய் படுத்திருக்கும்போது கூட செல்வராணி அக்கா – சின்னக்கிளி என்று பெயர் சொல்லி அழைத்து எவ்வளவோ. பழைய கதை எல்லாம் கதைத்தீர்கள். இப்படி எங்களை எல்லாம் தவிக்கவிட்டு போவதற்குத்தான் இப்படி எல்லாம் கதைத்தீர்களோ என்று இப்பொழுது நினைத்து நினைத்து கலங்குகின்றோம். உங்கள்ஒரே ஒரு அருமை மகனை விட்டுப்போவதற்கு எப்படித்தான் உங்களுக்கு மனம் வந்ததோ? உங்களுக்கு கட்டாயம் சுகம் வந்துவிடும் என்றுதான் நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் விதி சதி செய்து விட்டது. வைத்தியசாலையில் உங்கள் காய்ச்சல் கடைசிவரை விடவே இல்லையே. இப்பவும் நினைத்தல் தொட்டு தொட்டுப் பார்த்த எங்கள் கை சுடுகிறது. வைத்தியசாலையில் கடைசி நேரத்தில் நீங்கள் இருந்த நிலை கண்டு எங்கள் மனமே உடைந்துவிட்டது. இறைவன் எங்களை கைவிட்டு விட்டாரோ என்றும் எண்ணத் தோன்றியது. என்ன செய்வது? விதி வலியது. சிறு வயதில் நாங்கள் நீங்கள் எல்லாரும் ஒன்றாக வளர்ந்த காலங்கள் இன்றும் பசுமையான நினைவையாக எங்கள் மனதில் இருக்கின்றன என்றும் எப்போதும் அவை மறக்கமுடியாதவை.

நீங்கள் எங்களைவிட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களுள் நிந்தரமாக இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

**உங்கள் உடன் பிறவா சகோதரர்கள்**
**செல்வராணி, சுத்தானந்தன் அழகுராணி**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறைவன் கழல் அடியில் நின் ஆன்மா என்றும் அமைதியுறுக!"

திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்கள் கிளி என்னும் நாமத்துடன் வீட்டில் செல்லமாக அழைக்கப்பட்டார். அன்னார் எனது மூத்த சகோதரரின் இரண்டாவது மகளான நாகம்மாவின் இரண்டாவது மகளாவார். எனது இரத்த உரித்தினரான அமரர் சந்திரசிறி இராஜேஸ்வரனின் திடீர் மறைவுகேட்டு பேரதிர்ச்சிக்குள்ளாகி பெருந்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தினர் சார்பாகவும் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கிளி என்று அன்பாக அழைக்கப்பட்ட சந்திரசிறி இராஜேஸ்வரன் அன்புடன் பண்பாகப்பேசி மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் எல்லோர் மனத் திலும் நீங்காத இடம்பிடித்துள்ளார். யாழ்/கல்வித்திணைக்களத்திலும் ஆசிரிய சமூகத்திற்குத் தன்னாலான உதவிகளைச் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வளவு சீக்கிரம் அன்னார் எங்களை விட்டுப் பிரிவார் என யாருமே எதிர்பார்த்திருக்க வில்லை. அன்னாரின் கணவர் இறந்து ஓராண்டு நிறைவுபெறும் நாளுக்கான சமயக் கிரிகைகளுக்காகக் காத் திருக்கும் வேளையில் சந்திரசிறியும் கணவர் சென்றவழியில் சீக்கிரமாகப் பயணித்தார் என்பதும் பேரதிர்ச்சிக்குள்ளான விடயம்.

பிறப்புண்டேல் இறப்பும் உண்டு என்பது உலகநியதி. எனவே மனநிறை விற்கும் அமைதிக்கும் மானுட இயல்பிற்கும் அமையவும் மனித வாழ்க்கை இவ்வளவுதான் என்று தெளிவாக விளக்கும் பட்டினத்தார் பாடலைப் பாடி மனதை ஆற்றுப்படுத்துவோமாக.

ஊரம் சதமல்ல, உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல – பிள்ளைகளும்
சீரும் சதமல்ல – செல்வம் சதமல்ல, தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

**லயன்**
**வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி)**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சினிலே நிலைத்து நிற்கும் "கிளி அக்கா" எனும் நாமம்...

'கிளி அக்கா' என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி.சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்களின் திடீர் மறைவு எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் தந்துள்ளது. எதிர்பாராத சோகத்தில் தவிக்கின்றோம். உலகில் பிறக்கின்ற யாவரும் இறப்பது உண்மையென்கின்ற போதிலும் இவரின் இறப்பு இவ்வளவு குறுகியகாலத்தில் ஏற்பட்டுவிட்டதால் மனவேதனையடைகின்றோம். எமது ஊரிலே பிறந்து சிறுவயது முதல் இறக்கும்வரை எம்முடன் நன்றாகப்பழகிய எமது இரத்த உறவினரை இழந்து நாம் யாவரும் தவிக்கின்றோம்.

எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டுமென்ற ஆன்றோர் வகுத்த வழிமுறையில் ஒழுக்கத்துடன் இலட்சிய வாழ்வு வாழ்ந்து காட்டியவர் கிளி அக்கா அவர்கள் 1970ம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியை எண்ணிப்பார்க்கிறேன். எனது குடும்ப நிதிவசதியின்மை யான காலத்தில் நான் க.பொ.த.(சா/த) பயின்ற வேளையில் எனக்கு கணித பாடத்தில் மிகக் குறைந்தபுள்ளிகளே கிடைத்தது. விசேடவகுப்புக்குச் சென்று பயில முடியாமலிருந்த வேளையில் எதுவித பணமும் பெறாமல் எனக்குக் கணிதபாடம் படிப்பித்தவர் கிளி அக்கா அவர்கள் அவரிடம் கணிதம் படித்த காரணத்தால் திறமைச் சித்திபெற்று அதனால் இலங்கை வங்கியில் கடமை யாற்றி இவ்வளவு முன்னேற்றத்தை என்னால் பெறமுடிந்தது. ஆகையால் அன்னார் எனது வாழ்க்கையிலும் என் உயிர் உள்ளவரை தெய்வமாகவே இருக்கின்றார்.

வெள்ளை உள்ளம், கள்ளம் கபடமற்ற புன்சிரிப்பு, கனிவான பார்வை, இனிமையான பேச்சு, பண்பு, பணிவு, சாந்தமான செயற்பாடு, உதவி யற்றவருக்கு உதவி புரியும் தன்மை, கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடனான சேர்க்கை மிகுந்த சமயப்பற்று, மனிதநேயம் மிக்க செயற்பாடு எல்லாவற்றுக் கும் இலக்கணமாக விளங்கியவர் கிளியக்கா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுசென்று தனது தந்தையுடனும் சகோதரர்களுடனும் வாழ்வதற் காக தனது கணவரின் ஆசிரிய சேவையையும் தனது கல்வித் திணைக்கள சேவையையும் இடைநிறுத்தி தனது மகனின் மேற்படிப்பையும் நிறுத்தி முயற்சி செய்தார். அதனை நிறைவுசெய்யமுடியவில்லை. இதன்பின்னர் இங்கு வந்து பிள்ளையுடனும் கணவனுடனும் சந்தோசமாக வாழும் வேளையில் கணவன் திடீரென மாரடைப்பால் இவ்வுலகை நீத்தார். கணவரின் நினைவு நாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற வேளையில் திடீரென ஏற்பட்ட காச்சல் காரணமாக 'கிளி அக்கா' உலகை விட்டுப்பிரிந்தார். அவர் இவ்வுலகில் இல்லாவிடினும் அவரின் செயற் பாடும், புகழும் என்றும் எம்மனதில் நிலைத்து நிற்கும். நீர்க்குமிழி தோன்றிய பின் நிலையின்றித் தானழியும் நற்கனிகள் சில நொடியில் நிலமதனில் வீழ்ந்துவிடும் பார்க்கும் விழி ஒரு நாள் பார்வைதனை இழந்துவிடும் மார் பொருநாள் துடிப்பின்றி மண்ணோடு உடலழியும் பார்தனிலே பிறப்பென்றால் பிரிவதுவும் விதியாகும் என்ற தத்துவத்தை எண்ணி மனதை ஆறுதல் படுத்து வோமாக அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல்கூறி ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**தி.ஸ்ரீஸ்கந்தராசா**
**அகில இலங்கை சமாதான நீதிபதி (J.P)**
**ஓய்வுநிலை வங்கியாளர்**
**இலங்கை வங்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்கள்
யாழ்-கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் போது சக உத்தியோகத்தர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வித் திணைக்களத்தில் பயணித்த நாட்கள்...

காலஞ்சென்ற திருமதி சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்களை நான் சென்ற 30 வருடங்களாக நன்கு அறிவேன். சந்திரசிறி அவர்களின் இறப்பு செய்து அறிந்து ஆறாத்துயருற்றோம். திருமதி.இராஜேஸ்வரன் கல்வித் திணைக் களத்தில் பணிபுரிந்த பொழுது பெண்மைக்குரிய குணங்கள் எல்லாம் நிறைந்த பெட்டகமாக பலரை நன்நெறிப்படுத்தியவராய் நட்புக்கு இலக் கணமாக நல்வழி காட்டும் சகோதரியாக சக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதில் ஓர் இலட்சிய மகளாக வாழ்ந்துகாட்டியவர்.

ஸ்தாபனக் கிளையிலும் நிதிக்கிளையிலும் பணிபுரிந்த காலத்தில் தன்னடக்கத்திலும் உயர்வான பணியாலும் ஆசிரிய சமூகத்திற்கு அவர் செய்த சேவை அளப்பெரியது. திருமதி.இராஜேஸ்வரன் அவர்கள் தொண்டு செய்வதில் மணிமேகலை போல் தனது தாயார் சுகவீனமுற்று இருந்தபோது கண்ணும் கருத்துமாக பராமரித்தார்.

நானும் எனது மனைவியும் யாழ்ப்பாணம் செல்லும்போது இவர்களை சந்திக்க தவறுவதில்லை. திரு.இராஜேஸ்வரன் காலமான செய்திகேட்டு இவர் களை துக்கம் விசாரிக்கச்சென்ற பொழுது அந்த நிலையிலும் எமது பிள்ளை களின் நலன்பற்றி விசாரித்தது இன்னும் என் கண்முன்னே நிற்கின்றது. மனம் ஒத்த தம்பதிகளாக வாழ்ந்த இவர்களது வாழ்க்கையில் திரு.இராஜேஸ்வரனின் இழப்பு இவர்களுக்கு பேரிடியாக அமைந்தது.

போர்கால சூழ்நிலையில் தீவகக் கல்வி வலையத்தில் சந்திரசிறி அவர் கள் பணிபுரிந்த பொழுது சிரமம் பாராது துவிச்சக்கர வண்டியில் சென்று பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. தாயாரை பிரிந்து வாழும் தனையனுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை எனது குடும்ப சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ.வைத்தியகுமார்**
**இளைப்பாறிய நிர்வாக அதிகாரி**
**(கல்வி பண்பாட்டு அலுவல்கள்**
**விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றீர்கள்

இன்முகத்துடன் வரவேற்று
இனிய பல கதைகள் கூறி
ஆறு, ஏழு வருட நட்பல்ல
ஆறேழு நாற்பத்திரெண்டு
வருட நட்பில்
குடும்ப நண்பர்களானோம்
மாலைப் பொழுதினிலே
வாசலில் வந்து
கூடிக் குலாவிச் செல்வீர்களே
இருவரும் "கீர்த்தனனை"
நல்வழிப்படுத்த வேண்டுமென
கனவு கண்டீர்களே
எங்கே சென்றீர்கள்?
ஒரு வருட காலத்துள்
அண்ணர் உங்களையும்
அழைத்துச் சென்றாரோ
ஆசிரியத் தொழில் புரிவதற்காக?

தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உங்கள் பிரிவால் துயர் உறும்**
**கந்தசாமி குடும்பத்தினர்**
**விமலபவனம்,**
**காளி கோவிலடி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் அமரர் சந்திரசிறி இராஜேஸ்வரன் அவர்கள் உயர்தர வகுப்பில் அதிபர் செல்வி மேபிள் தம்பையா மற்றும் மாணவர் மன்ற உறுப்பினர்களுடன்.



யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வில் பங்குபற்றிய போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது குடும்பத்தலைவி சந்திரசிறி அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு வேண்டிய உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. அமரரின் இறுதி நிகழ்வுகளின் போது நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல், முகப்புத்தகம் முதலியன மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டும் மலர்வளையம் சாத்தியும் பத்திரிகைகள், போன்ற வற்றில் பிரசுரித்தும் அஞ்சலி செலுத்திய எமது அன்பு உள்ளங்கள் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். எமது அழைப்பை ஏற்று வந்து அந்தியேட்டி கிரியைகளிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இம் மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த மதிகலர்ஸ் அச்சகத்தினருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குல விருட்சம்

கதிரவேலு + நாகம்மா

- லைலாராணி (பானுமதி)
- சந்திர சிறி + ராஜேஸ்வரன்
  - கீர்த்தனன்
- சூரியகுமாரன்
- சந்திரகுமாரன் அமரர் (01 வயதில்)
- ஜெயசிறி + குணசீலன
  - அர்ச்சனா
  - அபிரா
- ராஜகுமாரன் + அனுலா (மாலா)
  - சரவணன்
  - குபேரன்
  - பவித்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமைப்பு: மதி கலர்ஸ், நல்லூர். 021 2229285